# DEPOSITION OF WITNESS

**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.91/2017**
**Prosecution Witness - PW6**

| | |
|---|---|
| Name | : திரு. அமீர் அலி. |
| Father's Name | : பகரூதின். |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 18.03.2025.

(A2 and A3 are present. A1 is absent. Petition U/s.355 BNSS is filed and allowed).

முதல் விசாரணை–

நான் கல்லுக்கூட்டத்தில் குடி வசிக்கிறேன். நான் ஆட்டோ டிரைவர். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் கேட்டுக் கொண்டதற்காக வந்தேன். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. ஆஜராகாத எதிரி கணபதி ஐ எனக்குத் தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

15, 20 வருடங்களாக நான் திங்கள் சந்தை ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டிக் கொண்டிருக்கிறேன். எங்கள் ஸ்டாண்டில் தான் ராதாகிருஷ்ணன் என்பவர் ஆட்டோ ஓட்டிக் கொண்டிருந்தாரா என்பது எனக்குத் தெரியாது. 07.07.2014 ம் தேதி எனக்குச் சொந்தமாக ஆட்டோவில் மாலை 05.40 மணிக்கு வெள்ளியாகோட்டிற்கு சவாரி சென்றேன் என்றால், அது விபரம் எனக்கு நினைவில் இல்லை. அவ்வாறு நான் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. என்னுடைய ஆட்டோ பதிவெண். டி.என்.75 E 1968. நான் சவாரி செய்து திரும்பி வரும் போது தான் ஆஜர் எதிரிகள் எனது ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டும் ராதாகிருஷ்ணன் என்பவரை காயப்படுத்தி விட்டு, எனது ஆட்டோவிற்கு

முன்னால் எதிரிகள் ஓடி வந்தார்கள் என்றாலும், நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த போது ராதாகிருஷ்ணன் காயம்பட்டு இருந்தார் என்றாலும், வினோ மற்றும் குசேலன் ஆகிய இருவரும், ராதாகிருஷ்ணனை சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு அவருடைய ஆட்டோவில் ஏற்றிச் சென்றார்கள் என்றாலும், இந்த விபரங்களை போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது நான் ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மை விபரங்களை மறைத்து தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை- ( எதிரி தரப்பில்)

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**